தி(. எஸ். ஏ பூங்காவனம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் வறட்சி ஒரு பக்கம் இருந்தாலும், அங்கேயுள்ள குடிநீர் வாரிய அதிகாரிகள், கிணற்றிலே தண்ணீர் இல்லையென்று சொன்னாலும், தூர் எடுக்கக் கூடாது என்று ஆர்டர் பிறப்பித்திருக்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா ? அந்தக் கிணறுகளில் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை.

*வினா எண். 334—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் வெள்ளத் தடுப்பு கடலரிப்பு போன்றவைகளுக்கு எவ்வளவு ஒதுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மத்திய திட்டக்குழு 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980—85) தமிழ்நாட்டின் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு, ரூபாய் 14,979 இலட்சம், சிறிய பாசனத் திட்டங்களுக்கு ரூபாய் 2,750 இலட்சம் மொத்த ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) வெள்ளத் தடுப்புத் திட்டங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புத் திட்டங்களுக்கு ரூபாய் 2,800 இலட்சம் மொத்த ஒதுக்கீடு செய்ய மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனங்களுக்கு மாநில அரசு எவ்வளவு கோரியது ? திட்டக்குழு ஆய்வுக்குப் பின் எவ்வளவு ஒதுக்கீடு செய்தது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய, மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக மாநில அரசு கோரியிருந்த தொகை, ரூபாய் 16,946 இலட்சம்

1981 மார்ச் 2]

மத்திய திட்டக் குழு ஆய்வுக்குப்பின், ஒதுக்கீடு செய்ய ஒத்துக் கொண்ட தொகை ரூபாய் 14,979 இலட்சம். சிறு பாசனத் திட்டங்களுக்கு மாநில அரசு கோரியிருந்த தொகை, ரூபாய் 2,750 இலட்சம். மத்திய திட்டக்குழு ஒப்புக் கொண்ட தொகை ரூபாய் 2,750 இலட்சம். வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்பு திட்டங்களுக்காக மாநில அரசு கோரியிருந்தது, ரூபாய் 2,800 இலட்சம். மத்தியத் திட்டக் குழு ஒப்புக் கொண்டதும் ரூபாய் 2,800 இலட்சம். ஆக, 90 சதவிகிதத்திற்கு மாநில அரசு கோரியதை, மத்திய திட்டக்குழு ஒப்புக்கொண்டது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. மி வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னென்ன புதிய திட்டங்களை செயல்படுத்த இந்த அரசு இருக்கிறது. புதிய அணைகள் ஏதாவது கட்டும் திட்டம் இருக்கிறதா? குமரி மாவட்டத்திலே பேச்சிப்பாறை, சிற்றாறு போன்ற அணைகளில் நீர்ப்பாசனத்திற்குப் பாயும் மட்டத்திற்குக் கீழே 30 அடி தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது. பருவ மழை தவறும் அந்தக் காலங்களில் இந்தத் தண்ணீரை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த இராட்சத இயந்திரங்களைக்கொண்டு வந்து பம்பிங் ஸ்கீம் திட்டத்தை கொண்டுவர இந்த அரசு முன்வருமா?

[முற்பகல் 10·20]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மத்திய திட்டக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள, மொத்த ஒதுக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு நாம் ஆய்வு செய்து முடித்ததற்குப் பிறகு பெரிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்கிறோம்.

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மற்றக் கேள்விகளைத் தனியாகக் கேட்டால் அதற்குப் பதில் சொல்ல இயலும்.

திரு டி. கே. கபாலி : தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் பட்டினப்பாக்கம் பகுதியில் கடல் அரிப்பு வருவதால், அதைத் தடுக்கும் திட்டம் இந்த ஆண்டாவது நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்பதற்கு விளக்கமாகப் பதில் சொல்லி இருக்கிறேன். மற்றக் கேள்விகள் எல்லாம் தனியாகப் போட்டால் தான் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் வெள்ளத் தடுப்பு கடலரிப்பு போன்றவைகளுக்கு எவ்வளவு ஒதுக்கப்படும் என்றும் ஒரு கேள்வி இருக்கின்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதற்கு எவ்வளவுஒதுக்கப்பட்டது என்பதையும் சொல்லிவிட்டேன்.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்பு போன்றவைகளுக்கு 2,750 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி பகுதியில் அடிக்கடி கடல் அரிப்பு போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டு பல பகுதிகள் பாதிக்கப்பட்டு உள்ளது. அதையும் கவனத்தில் கொண்டு அரசு இந்தத் திட்டங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, வெள்ளத்தடுப்பு, கடல் அரிப்பு பணிகள் எந்த எந்த இடங்களில் எப்படி செலவிடப்படும் என்பதை அரசு ஆய்வு செய்து கொண்டு வருகிறது. அப்போது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை பற்றியும், அதிலே வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்புப் போன்ற காரியங்களுக்கு எவ்வளவு செலவிடப்படும் என்றும் தெரிவித்தார். வெள்ளத் தடுப்பு என்றாலே, ஒவ்வொரு வருஷமும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் கொள்ளிடத்தில்தான் அதிகமாக வெள்ளம் வரும். என்பதை தமிழகம் முழுவதும் அறியும். பல நதிகளில் இருந்து வரும் தண்ணீரைக் கொள்ளுகின்ற காரணத்தினாலே அதற்குக் கொள்ளிடம் என்று பெயர். அப்படிப்பட்ட கொள்ளிடத்தில் வெள்ளம் வருகின்ற காலங்களில், கல்லணையில் இருந்து கொள்ளிடம் வரையில் இரண்டு கரைகளையும் பலப்படுத்த அதிகமான தொகையினை ஒதுக்கி வெள்ளத்தைத் தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே தனிக் கேள்வி போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களை நீங்கள் அனுப்பியிருப்பதிலே, பின் தங்கிய மாவட்டமாகிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எந்தெந்தத் திட்டங்களை அனுப்பியிருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தனியாக திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அதை ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போது விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். மொத்தமாக நடுத்தர பாசனத் திட்டம் வரை சுமார் 140 கோடி, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கி, ஆய்வு வேலைகள் நடந்துக் கொண் டிருக்கின்றன. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தரப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய திட்டக் குழுவின் மூலமாக ஒதுக்கப்பட்ட தொகையை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகை ஒவ்வொரு ஆண்டிற்கும் மத்திய திட்டக்குழு உதவி செய்கிறதா? அல்லது ஐந்தாண்டுக்கும் ஒதுக்கி, ஒவ்வொரு ஆண்டுக்கும் விகிதாசாரப் படி மத்திய திட்டக்குழு அந்தப் பணத்தை ஒதுக்குகிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மொத்தமாக நாம் தயாரித்துக் கொடுத்த திட்டங்களுக்கு அவர்கள் ஒப்புதல் அளித்து ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆண்டு தோறும் நாம் திட்டங்களைத் தயாரித்து அந்த ஒதுக்கீட்டை செலவு செய்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னையை ஒட்டியுள்ள திருவொற்றியூர் பகுதியில் ஆண்டு தோறும் கடல் அரிப்பு அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படுகிறது. அதனால் பல்வேறு கிராமங்கள் பாதிக்கப் படுகின்றன. நூற்றுக்கணக்கான வீடுகள் ஆண்டுதோறும் பாதிக்கப்படுகின்றன. எனவே, இப்போது அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் தொகையில் வேலை ஆரம்பிக்கும்போது, இந்த அக்டோபர் மாதத்திற்குள்ளேயே துரிதமாக அந்தப் பணத்தைச் செலவு செய்து, அந்த வேலையைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிற கருத்தை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து, இப்போது உடனடியாகச் செய்யக்கூடிய திட்டங்களை எடுத்துக் கொண்டு செயல்படத் தொடங்கும். நான் மேலும் ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கடலைக் கொஞ்சம் பின்னாலே—ஒரு 100 அல்லது 200 அடி தள்ளக் கூடிய அளவிற்கு பெரிய வலுவான கரைகளைக் கட்டுவதற்கு அரசு தனியாக இப்போது ஆராய்ந்து வருகிறது. அதையும் செயல்படுத்தத் தொடங்கினால் இப்படிப்பட்ட சேதாரத்தை எதிர்காலத்தில் நிச்சயமாகத் தவிர்க்கலாம் என்று நாம் நம்பலாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு, மேல் அரசம்பட்டு, அணைக் கட்டைக் கட்ட அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி மூலக் கேள்வியை ஒட்டி இல்லாததால் அனுமதி மறுக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உயர் மட்டக் கால்வாய்

*வினா எண் 335 திருவாளர்கள், வே. இரா. ஜெயராமன், கே. எம். எஸ். சுப்பிரமணியன், ஆர். டி. கோபாலன், கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் லோயர் கேம்பிலிருந்து பெரிய குளம் வரை, மேற்கு மலைத் தொடர் அடிவாரத்தில் ஒரு உயர் மட்டக் கால்வாய் கம்பம், தேனி, போடி நாயக்கனூர், பெரிய குளம் ஆகிய தொகுதிகளின் வழியாக அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் காலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளான கம்பம், போடி, தேனி, பெரியகுளம் போன்ற பகுதிகள் பயன் அடையும் வகையில் 18 ஆம் கால்வாய்த் திட்டம் என்ற பெயரில் ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில், இந்தத் திட்டம் மேற் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே 18-ஆம் காலவாய்த் திட்டம் என்பது ஆங்கிலேயர் காலத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அந்தத் திட்டத்தின் மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அந்தப் பகுதி வறண்ட பகுதியாக இருக்கிற காரணத்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களும், அங்கேயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களும் கேட்டுக் கொண்ட காரணத்தாலும், இப்போது திரும்ப வும் அந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்துக் கொண்டு வரு கிறோம். ஆய்வு முடிந்த பிறகு அரசு தக்க நடவடிக்கை மேற் கொள்ளும்.